
www.tamilarangam.net



# பகிர்வோம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ்

### - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் -

# மீளகுடியேற்றப் பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன!

வன்னி – கிளிநொச்சிப் பிராந்தியங்களில் பல்லாயிரம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள குடியேற ஆரம்பித்துள்ளனர். பல்வேறு இராணுவ நடவடிக்கைகளால் தமது கிராமங்களை விட்டு வெளியேறி பல்வேறு தற்காலிக நிலையங்களில் தங்கி வாழ்ந்த மக்கள் இப்போது தமது சொந்த இடங்களில் குடியேறுவதில் தீவர ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர். பெரும்பாலான கிராமங்கள் நீண்டகாலம் கைவிடப்பட்டமையாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் சிதைந்து, உருக்குலைந்து கிடப்பதால் மீள்குடியேற்றப் பணிகள் பெரும் இடர்களை எதிர்நோக்குகின்றது. வீடுகள் அமைப்பது, குடிநீர் விநியோகம், பள்ளிகள் நிறுவுவது போன்ற அத்தியாவசிய பணிகளுடன் உடனடி வேலைவாய்ப்புக்கான ஏற்பாடுகளும் தேவைப்படுகின்றன.

இப்பணிகளுக்கான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், அதனது உள்நாட்டு, வெளிநாட்டுப் பங்காளி நிறுவனங்களும் மேற்கொள்ளுகின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெண்புறா நிறுவனத்தினர் கண்ணிவெடிகளை அகற்றி மக்கள் மீள குடியேற்றங்களை மேற்கொள்ள உதவுகின்றனர். மீள குடியேறும் மக்கள் தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

எனினும், பல்லாயிரக் கணக்கான மக்களின் தேவைகளுக்கு ஈடுகொடுத்து மீள்குடியேற்றப் பணிகள் நடைபெறவிருப்பதால் அதற்கான பெரும் நிதிப்பலத்தை புனர்வாழ்வுக் கழகம் புகலிடத் தமிழர்களிடம் இருந்தும், சர்வதேச சமூகத் திடமிருந்தும் எதிர்பார்க்கின்றது.

## யுனிசெவ் உதவியுடன் வெண்புறா பரப்புரை

கண்ணிவெடிகளை அகற்றி மக்களை பாதுகாப்பாக தமது சொந்த வீடுகளுக்கு அனுப்புவதற்கான பணியில் ஈடுபடும் வெண்புறா கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஐ.நா சிறுவர் நிதியத்தின் உதவியுடன் பள்ளிசிறுவர்களுக்கு கண்ணிவெடிகளின் ஆபத்துக்கள் பற்றிய பரப்புரையை மேற்கொண்டு வருகின்றனர். பள்ளிச் சிறுவர்கள் அத்தகைய பொருட்களைக் கண்டால் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. அண்மையில் கனகராயன்குளம் பகுதியில் 1100 கண்ணி வெடிகளை அகற்றிய வெண்புறா கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், அப்பகுதி மக்களின் பெரும் ஈடுபாட்டை இத்திட்டத்திற்குப் பெற்றிருந்தனர். அதேபோன்று ஒட்டுசுட்டானில் கண்ணிவெடிகளை தேடிய போது, கூட்டுறவுசங்க வளாகத்தில் ஒரு எலும்புக் கூட்டை மீட்டனர். அத்துடன் 110 கண்ணிவெடிகள் கூட்டுறவுச் சங்க பகுதியில் புதைக்கப்பட்டிருந்ததையும் கண்டெடுத்தனர்.

## வன்னியில் டெங்கு அபாயம்

வன்னியில் டெங்குகாய்ச்சல் பரவும் அபாயம் தோன்றியிருப்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். உயிராபத்தை ஏற்படுத்தும் இந்த டெங்கு காய்ச்சல் இப்பிரதேசத்தில் பரவக்கூடிய நிலை தோன்றியுள்ளது. டெங்கு காய்ச்சலைப் பரப்புகின்ற நுளம்பினால் ஏற்படுகின்ற ஒருவகை வைரஸ் காய்ச்சலே டெங்குகாய்ச்சல் ஆகும். இது குருதிப் பெருக்கை ஏற்படுத்தக் கூடியவரை ஆபத்தானதும், உயிரிழப்பை உண்டாக்கவல்லதுமாகும். இதன் தாக்கத்திற்கு சிறுவர்களும் இளவய தினரும் உள்ளாவர். இந்நோயைப் பரப்பும் நுளம்புகள் வன்னிப்பிரதேசம் எங்கும் பொதுவாகக் காணப் படுவதால் மக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் செயற் படுமாறு சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிளிநொச்சியில் சுகாதார விழிப்புணர்வு

கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிமனையினர் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கிளிநொச்சியில் நாலு வலயங்களாக் பிரிக்கப்பட்டு இந்த செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. வர்த்தக நிலையங்கள், உண வகங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், மக்கள் அதிகமாக்கூடும் இடங்கள் என்பனவற்றுக்கு அருகா மையில் உள்ள நீர் தேங்கும் குழிகள் சுகாதார தொண்டர்களினால் மண்போட்டு மூடப்பட்டு வரு கின்றன. இதேவேளை, மிகவும் இறுக்கமான சுகாதார விதி முறைகளை கடைப்பிடிக்குமாறு அப்பகுதி மக் கள் அனைவருக்கும் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது.

வன்னேரி, ஆனைவிழுந்தான், அக்கராயன், ஸ்கந்தபுரம், கோணாவில், கிளிநொச்சி நகரப்பகுதி, வட்டக்கச்சி, தர்மபுரம், கண்டாவளை போன்ற இடங் களில் இந்த செயற்பாடுகள் இம்மாதம் முன்னெடுக்க ப்பட்டு வருகின்றன.

## 16,000 கிலோ பனை வெல்லம் உற்பத்தி

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் கடந்த 11 மாதங்களில் 16 ஆயிரம் கிலோ பனை வெல்லத்தை உற்பத்தி செய்து சந்தைப் படுத்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது வன்னியில் உற்பத்தியாகும் மொத்த பனை வெல்ல உற்பத்தியில் 50 வீதத்திற்கும் அதிகமாகும்.

## சமூக பொருளாதார அபிவிருத்தி குழுக்களுக்கான பயிற்சி கருத்தரங்கு

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் தமது பிரிவில் உள்ள சமூக பொருளாதார அபிவிருத்தி குழுக்களுக்கான பயிற்சி கருத்தரங்கு ஒன்றை நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடத்தியது. குழுக்களுக்கான பயிற் சிகளை முல்லை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாக உத்தியோகத்தர் நிர்மலன், போருட் நிறுவன திட்ட அலுவலர் சுடர், முல்லை மாவட்ட அரச சார்பற்ற இணைய திட்ட முகாமையாளர் கலை வர்ணன், தமிழர் புனர்வாழ்வு கழக திட்ட இணைப் பாளர் திரு கணேசலிங்கம் ஆகியோர் வழங்கினர்.

# முல்லையில் 8 ஆண்டுகளில் 1266 சூபர; மரணம;

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் 1991 முதல் 1999 வரையான 8 ஆண்டு காலப் பகுதியில் 1266 பேர் மரணமடைந்துள்ளனர். (1995ம் ஆண்டு இறப்பு விபரம் இதில் சேர்க்கப்படவில்லை) கடந்த 1991, 92, 93, 94, 96, 97, 98, 99ம் ஆண்டுகளில் இந்த இறப்புகள் நிகழ்ந்துள்ளதாக வைத்தியசா லைப் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கடந்த ஆண்டில் மட்டும் முல் லைத்தீவு மாவட்டத்தில் 835 இறப்புகள் நிகழ்ந் துள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் ஆகக்கூடுதல் இறப்புகளை சந்தித்த 3 ஆண்டுகளில் 1999ம் ஆண் டும் அடங்கியுள்ளது. பொருளாதார தடை, போசாக் கின்மை, நோய்கள் அதிகரிப்பு மற்றும் இடப்பெயர் வுகள் காரணமாகவும் இந்த இறப்புகள் சம்பவித் துள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 67 இறப்பு களும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 441 இறப்பு களும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 15 இறப்புகளும், துணுக்காய் பிரதேசத்தில் 293 இறப்புகளும், மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 69 இறப்புகளும் சம்பவித் துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 1999ம் ஆண்டு நிகழ்ந்த 835 இறப்புகளில் 535 பேர் ஆண்களா வார்கள்.

# கியூடெக் உதவி

மனித முன்னேற்ற நடுநிலையம்(கியூடெக்) யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 153 நலன்புரி நிலையங்களில் உள்ள 27,771 சிறார்களுக்கு இந்த ஆண்டில் போசாக்கு உணவு வழங்கியுள்ளது. இடம்பெயர்ந்த 1000 குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி போன்ற உலர் உணவு பொருட்களையும் வழங்கியுள் ளது. அத்துடன் இடம்பெயர்ந்த 600 குடும்பங்களுக்கு தற்காலிகமாக தங்குவதற்கான தங்குமிடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளன.

- யாழ். குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கான தடை தொடர்ந்து நடைமுறையில் உள்ளதால் மீனவக் குடும்பங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.
- யாழ்.மாவட்ட விவசாயச் செய்கைக்குத் தேவையான யூரியா உரத்தைக் கொழும்பிலிருந்துகொண்டு செல்வதற்கு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

## முல்லை மாவட்ட மக்கள் தொகைப் புள்ளி விபரம்

| விபரம் | குடும்பங்களின் எண்ணிக்கை | சனத்தொகை |
|---|---|---|
| நிரந்தரம் → | 21,700 | 97,859 |
| இடம் பெயர்ந்தோர் → | 52,450 | 198,622 |
| | 74,150 | 296,481 |

*ஆதாரம்: யூலை-99 அரசசார்பற்ற நிறுவனங்களின் அறிக்கை*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வன்னிக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் மறுப்பு உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் உதவி

ஓயாத அலைகள் நடவடிக்கை யாழ்குடா நோக்கி விரிவாக்கப்பட்டதையடுத்து, யாழ்குடா, தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் இருந்து பெரும் தொகையான மக்கள் இடம்பெயர்ந்து வன்னியில் வந்து தங்கியுள்ளனர். 600ற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 2000 மேற்பட்டவர்கள் இவ்வாறு வன்னிக்கு இப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தற்போது தங்கியுள்ளனர்.

இந்த மக்களை நலன்புரி நிலையங்களில் தங்கவைத்து பராமரிக்கும் பொறுப்பை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அரச சார்பற்ற உள்ளூர் தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது. இவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குமாறு அரச அதிபர்கள் அரசாங்கத்திடம் அறிக்கைகள் சமர்ப்பித்தும் நிவாரணம் வழங்க மறுத்துள்ளது.

## குடாநாட்டு மக்களுக்கு நிவாரணம் இல்லை

யாழ். குடாநாட்டிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு கார்த்திகை மாதத்திற்குரிய உலர் உணவு நிவாரணம் சிறீலங்கா அரசால் இதுவரை வழங்கப்படாததால், நிவாரணத்தை நம்பியுள்ள ஒரு லட்சத்து 15 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிவாரணம் ஒவ்வொரு மாதமும் முற்பகுதியில் வழங்கப்பட்டு வருவது வழக்கம். ஆனால் இந்த மாதம் நிவாரணம் வழங்கப்படவில்லை.

## யாழ் மாவட்டத்தில் 20,000 பேர் விதவைகள்

கடந்த 18 ஆண்டுகளாக வடக்கு - கிழக்கு பகுதிகளில் நடைபெறும் போரினால் யாழ் மாவட்டத்தில் மட்டும் சுமார் 20,000 மேற்பட்டோர் தமது கணவனை இழந்து விதவைகளாகியுள்ளனர். இவர்களில் அதிகமானோர் 35 வயதிற்கு உட்பட்டோர் என ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

**பிரதேசவாரியாக விதவையானவர்களின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 1,700 |
| கோப்பாய் | 2,500 |
| பருத்தித்துறை | 1,700 |
| சாவகச்சேரி | 2,700 |
| நல்லூர் | 2,100 |
| உடுவில் | 1,750 |
| கரவெட்டி | 1,700 |
| சண்டிலிப்பாய் | 1,440 |
| சங்கானை | 1,312 |
| ஊர்காவற்துறை | 580 |
| தெல்லிப்பழை | 500 |
| வேலணை | 385 |
| பளை | 230 |
| மருதங்கேணி | 28 |

## வன்னியில் போசாக்கின்மையால் சிறார்கள் மோசமாக பாதிப்பு



மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வாழும் 5 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் போசாக் கின்மையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். வன்னிப் பகுதி மீதான பொருளாதார தடை மற்றும் போர்ச் சூழலினாலே இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் 2055 சிறார்கள் போசாக்கின்மையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 265 பேர் சிசுக்களாவார். 1790 பேர் ஒரு வயதுக்கும் ஐந்து வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள். இப் பகுதியில் ஒரு வயது முதல் ஐந்து வயதுக்குட்பட்ட 3846 சிறார்களும், 1214 சிசுக்களும் உள்ளனர். இங்குள்ள கர்ப்பிணிப் பெண்களில் 92 பேர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, துணுக்காய் பிரதேசம் தெண்ணியன்குளம், உயிலங்குளம் கிராமங்களில் வாழும் சிறார்களில் 50 வீதமானவர்கள் போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒக்ஸ்பாம் நிறுவன அனுசரணையுடன் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது 50 வீதமான சிறார்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை அறியப்பட்டுள்ளது. உயிலங்குளம், தெண்ணியன்குளம் பகுதிகளில் 268 குடும்பங்களை சேர்ந்த 1123 பேர் வாழ்கின்றனர். இவர்களில் 50 வீதமான சிறார்கள் போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 12,590 சிறார்களுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட்டது

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்தில் போலியோ தடுப்பு மருந்து முதற் கட்டத்தில் 12 ஆயிரத்து 590 சிறார்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. இரண்டாம் கட்ட வழங்கல் டிசம்பர் மாதம் 1ம், 2ம் திகதிகளில் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டு அல்லலப்படும் வன்னி மக்களுக்கு அவசியமான உத விகள் உடனடியாக தேவைப்படும் குடும்பங்களில் 956 குடும்பங்களுக்கு மட்டும் கிடுகுகளை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் வழங்கியுள்ளது. இவர்கள் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களாவர்.

## பிரான்ஸ் வாழ் மக்களுக்கோர் அன்பான வேண்டுகோள்

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் தாயகத்தில் அல்லலுறும் எமது மக்களுக்கு உதவுவதற்காக தங்களின் இல்லங்களில் எம்மால் வைக்கப்பட்ட உண்டியல்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் திருப்பி ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

அத்துடன் 2001ம் ஆண்டுக்கான புதிய உண்டியல்கள் உங்கள் இல்லங்களில் இருக்கட்டும். எமது இனத்தின் இன்னல் களைந்திட சிறு சேமிப்புக்களை சேர்த்து வழங்க உண்டியல்களை பெற்றிட எமது பணியகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 26, Rue département 75018 Paris தொ.பே:- 01 40 38 30 74






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்